தெலங்கானாவில் அறிவியல் கண்காட்சி: மாணவர்களைத் தயார்படுத்த உத்தரவு

சென்னை, அக். 18: தெலங்கானா மாநிலத்தில் தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி ஜனவரியில் நடைபெற உள்ள நிலையில், அதில் தமிழக மாணவர்களை பங்கேற்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு, பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை: தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி வரும் ஜனவரி மாதம் தெலங்கானா மாநிலத்தில் நடைபெறவுள்ளது. அதற்கு முன், 4 மாநிலங்களில் டிசம்பர் மாதத்தில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி முடித்து வெற்றி பெற்றவர்கள் தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

எனவே, மாவட்ட அளவில் ஏற்கெனவே கண்காட்சி முடிக்கப்பட்டு இருப்பின் பாராட்டுக்குரியது. மாவட்ட அளவில் அறிவியல் கண்காட்சி நடத்தாதவர்கள் நவம்பர் மாதத்துக்குள் கண்காட்சியை நடத்தி, மாநில அளவில் பங்கு பெறுவதற்கான ஆசிரியர் குழு, மாணவர் குழு, தனிநபர் சாதனைகளைத் தேர்வு செய்து வரும் டிசம்பர் மாதத்தில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் கலந்து கொள்வதற்கு தயார்படுத்துமாறு அறிவியல் மற்றும் கணித ஆசிரியர்களுக்கு, தலைமையாசிரியர் மூலமாக அறிவுறுத்த வேண்டும்.

அறிவியல் கண்காட்சியின் மூலம் மாணவர்களின் தனித்திறன், குழு மனப்பான்மை, அறிவியல் மனப்பான்மை, அறிவியல் சோதனைகளின் மூலம் உண்மைகளைக் கண்டறிதல், ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு, பல்வேறு திறன்கள் மாணவர்களுக்கு கிடைக்கும். எனவே, மாணவர்களை முறையாக ஊக்குவித்து அதிக அளவில் பங்கேற்க செய்ய அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் சம்பவம்: 39 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 20 லட்சம்

தவெக சார்பில் வங்கிக் கணக்கில் வரவுவைப்பு

கரூர், அக். 18: கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 39 பேரின் குடும்பத்தினரின் வங்கிக் கணக்கில் தவெக சார்பில் தலா ரூ. 20 லட்சம் சனிக்கிழமை வரவு வைக்கப்பட்டது.

கரூரில் செப். 27-ஆம் தேதி வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற தவெக தலைவர் விஜய் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 110 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 20 லட்சம் வழங்கப்படும் என தவெக தலைவர் விஜய் அறிவித்திருந்தார்.

இதையடுத்து இழப்பீட்டுத் தொகையை நேரில் வழங்குவதற்காக விஜய் கரூர் வருவதற்கான ஏற்பாடுகளை தவெக நிர்வாகிகள் செய்து வந்தனர். இது தொடர்பாக சென்னையில் டிஜிபி அலுவலகத்தில் மனுவும் அளித்தனர். மேலும் தவெக தரப்பில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி வழங்கும் நிகழ்ச்சியில் பொதுமக்கள் யாரும் பங்கேற்கக் கூடாது. செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் கலந்துகொள்ளக் கூடாது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்பன உள்ளிட்ட நிபந்தனைகளையும் விதித்திருந்தனர்.

மேலும், இந்த நிகழ்ச்சிக்காக கரூர் வெண்ணைமலை மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தனியார் மண்டபம், சம்பவம் நடைபெற்ற வேலுச்சாமிபுரத்துக்கு அருகே உள்ள தனியார் திருமண மண்டபம் ஆகிய இடங்களை தேர்வு செய்யும் பணியிலும் அந்தக் கட்சியினர் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் தவெக தலைவர் விஜய், கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.20 லட்சத்தை அவரவர் வங்கிக் கணக்கில் சனிக்கிழமை செலுத்தினார்.

இதுகுறித்து கரூர் மாவட்ட தவெக நிர்வாகிகள் கூறுகையில், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் 41 பேரில் 39 பேரின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டு தொகையை தவெக தலைவர் விஜய் சனிக்கிழமை அனுப்பியுள்ளார். மீதம் உள்ள 2 பேரின் குடும்பங்களில் வாரிசு யார் என்பது தொடர்பாக சட்டரீதியாக சில பிரச்னைகள் உள்ளன. அந்தப் பிரச்னை முடிந்தவுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் பணம் அனுப்பிவைப்பார் என்று தெரிவித்தனர்.

ஏமூர்புதூரைச் சேர்ந்த 5 பேருக்கு முதலில் அனுப்பி வைப்பு: கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களில் ஏமூர்புதூரைச் சேர்ந்த சந்திரா, பிரியதர்ஷினி, அருக்காணி உள்ளிட்ட 5 பேரின் குடும்பத்தினர் வங்கிக் கணக்கில் முதல்முதலாக இழப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

தீபாவளியை கொண்டாட வேண்டாம்: தொண்டர்களுக்கு அறிவுறுத்தல்

சென்னை, அக்.18: கரூர் துயர சம்பவம் நடந்ததையடுத்து தவெக கட்சி சார்பில் தீபாவளியைக் கொண்டாட வேண்டாம் என தொண்டர்களுக்கு அந்தக் கட்சி அறிவுறுத்தியுள்ளது.

தவெக தலைவர் விஜய்யின் அறிவுறுத்தலின்படி, இந்த ஆண்டு தவெக சார்பில் தொண்டர்கள் யாரும் தீபாவளி பண்டிகையை கொண்டாட வேண்டாம். உயிரிழ்ந்த 41 பேருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கட்சியின் சார்பில் தொண்டர்கள் யாரும் தீபாவளியை கொண்டாட வேண்டாம் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் என்.ஆனந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

சட்ட ரீதியாக அனுமதி கிடைத்ததும் கரூர் செல்வேன்



சென்னை, அக். 18: சட்டரீதியாக அனுமதி கிடைத்தவுடன் கரூருக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்திப்பேன் என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்தார்.

இதுதொடர்பாக கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு விஜய் எழுதிய கடிதம்:

கரூரில் ஏற்பட்ட தாங்க முடியாத வேதனையால் நமது குடும்ப உறவுகளை இழந்து தவிக்கிறோம். இந்த சூழலில் உங்களுக்கு ஆறுதலாகவும், ஆதரவாகவும் எல்லா வகையிலும் இருப்பேன் என மீண்டும் உறுதி தெரிவிக்கிறேன்.

கடந்த வாரம் உங்களுடன் துக்கத்தை பகிர்ந்து கொள்ள மேற்கொண்ட காணொலி அழைப்பில் நான் சொன்னது போல, நமது சந்திப்புக்கான சட்டரீதியான முன்னெடுப்புகளை எடுத்து வருகிறோம். அனுமதி கிடைத்தவுடன் நிச்சயம் சந்திப்போம்.

இதற்கிடையே, நான் ஏற்கெனவே அறிவித்தபடி, குடும்ப நல நிதியாக ரூ.20 லட்சத்தை பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்குக்கு சனிக்கிழமை அனுப்பியுள்ளோம். அதை உதவிக்கரமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவன் அருளால் இந்தக் கடினமான தருணத்தைக் கடந்து வருவோம் என்று தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலை. சட்டத் திருத்த மசோதா: திரும்பப் பெற இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, அக். 18: தனியார் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு தனியார் பல்கலைக் கழகச் சட்டம் 2019- இல், தனியார் பல்கலைக் கழகம் அமைக்க தொடர்ச்சியாக குறைந்தபட்சம் 100 ஏக்கர் பரப்பளவு நிலம் தேவை என்ற சட்டப் பிரிவைத் திருத்தம் செய்யும் வகையில் தமிழக சட்டப்பேரவையில் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்படும் பாதிப்புகள் குறித்து குறிப்பாக, மாணவர் சேர்க்கை முறை, கல்விக் கட்டணம், துணைவேந்தர், இணை வேந்தர் நியமன முறை, ஆட்சி மன்றக் குழு போன்ற எல்லாவற்றிலும் அரசு விலகிக்கொள்ள இந்தச் சட்டம் வழி வகுத்துவிடும் என்பதைப் பேரவையில் அரசின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத் திருத்த மசோதா வழியாக தமிழக அரசின் சமூக நீதி கொள்கையும், இட ஒதுக்கீட்டு நடைமுறைகளும் கைவிடப்படும். தனியார் பல்கலைக் கழகங்கள் புற்றீசல்கள்போல் தோன்றும் ஆபத்துள்ளது.

இது குறித்து உயர் கல்வித் துறை நிபுணர்கள், மூத்த பேராசிரியர்கள், மாணவர் அமைப்புகள் என பல தரப்பினரும் கூறியுள்ள கருத்துகளை அரசு பரிசீலித்து, தனியார் பல்கலைக் கழக சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

வழக்குரைஞர் தாக்கப்பட்ட சம்பவம்

திருமாவளவன் நினைத்திருந்தால் முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம்: உயர்நீதிமன்றம் கருத்து

சென்னை, அக். 18: வழக்குரைஞர் தாக்கப்பட்ட சம்பவத்தில் திருமாவளவன் நினைத்திருந்தால், அப்போதே தனது தொண்டர்களைக் கட்டுப்படுத்தி இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், வழக்குரைஞர் கே.பாலு தாக்கல் செய்த மனுவில், உயர்நீதிமன்றம் முன்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கார் மோதியதாக ஏற்பட்ட பிரச்னையில் வழக்குரைஞர் ராஜீவ் காந்தி தாக்கப்பட்டார்.

தாக்குதல் நடத்திய வழக்குரைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க பார் கவுன்சிலில் புகார் அளித்தேதேன். இதையடுத்து, கடலூரைச் சேர்ந்த வழக்குரைஞர் ஒருவர் தனக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து கடந்த 15-ஆம் தேதி எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் அளித்த புகார் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, தனது புகார் மீது வழக்குப் பதிவு செய்து, தனக்குப் பாதுகாப்பு வழங்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.சதீஷ்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் இளவரசன் ஆஜராகி, மனுதாரரை அவதூறாகப் பேசி மிரட்டல் விடுக்கும் விடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியுள்ளது.

வழக்குரைஞர் தாக்கப்பட்ட சம்பவத்தை போலீஸார் வேடிக்கைதான் பார்த்தனர். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த மனு தாக்கல் செய்த பின்னர், தாக்கப்பட்ட வழக்குரைஞர் உள்பட இரு தரப்பினர் மீதும் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். எனவே, மனுதாரருக்கு பாதுகாப்பு வழங்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

காவல் துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் கே.எம்.டி.முகிலன் ஆஜராகி வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, உயர்நீதிமன்றம் முன் வழக்குரைஞர் ராஜீவ் காந்தி தாக்கப்பட்டது தொடர்பான வழக்கின் நிலை அறிக்கை, சம்பவம் நடந்த இடத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை வரும் அக். 27-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

மேலும், இந்தச் சம்பவத்தில் திருமாவளவன் நினைத்திருந்தால் அப்போதே தனது தொண்டர்களைக் கட்டுப்படுத்தி இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம் என்று நீதிபதி கருத்து தெரிவித்தார்.

கனரா வங்கி (Canara Bank)
சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை
எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல்: cb7901@canarabank.com

சுவாதீன அறிவிப்பு பிரிவு 13(4) (அசையா சொத்திற்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ள கனரா வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கம் சட்டம் பிரிவு 13(12) மற்றும் விதி 3ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க (2002ல் சட்டம் 54) சட்டத்தின் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர் M/s. Savvy Kitchen, ஒரு பங்குதாரர் நிறுவனம், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திரு. பிரவீன். K. A (பங்குதாரர்) மற்றும் திரு. அஜித்பிரசாத். R (பங்குதாரர்), எண்.9/12A, தரை தளம், ஜெய் நகர், 2வது தெரு, ஆற்காடு சாலை, வளசரவாக்கம், சென்னை – 600087. 2. திரு. பிரவீன். K. A, TC 53/512, ஸ்ரீகார்திகா, மாங்குளம் சந்து, பாப்பனம்கோடு, நெய்யாட்டின்கரா, திருவனந்தபுரம் - 695018. 3. திரு. அஜித்பிரசாத். R, த/பெ. திரு. இராஜேந்திரபிரசாத்.V, சாஸ்வதி பவன் ஸ்வாதி நகர், மொட்டமூடு, பள்ளிச்சல், திருவனந்தபுரம் – 695020. 4. திரு. இராஜேந்திரபிரசாத். V, (ஜாமீன்தாரர்) த/பெ. திரு. வாசுதேவன், சாஸ்வதி பவன் ஸ்வாதி நகர், மொட்டமூடு, பள்ளிச்சல், திருவனந்தபுரம் – 695020, ஆகியோர்களுக்கு 07.08.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அதில் காணும் 06.05.2025அன்றுள்ளபடி கடன் தொகையான ரூ.57,60,682.29/- (ரூபாய் ஐம்பத்து ஏழு இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்) மேலும் வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் பாக்கித் தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பாவது மேற்படி சட்டப் பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய 8 மற்றும் 9வது விதியின் கீழ் அதிகாரபூர்வ அதிகாரியானவர் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 16.10.2025 அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கும் குறிப்பாக பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதாவது சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக் கூடாது மீறி வைத்துக் கொண்டால் அது கனரா வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய 14.10.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ. 61,34,598.73 (ரூபாய் அறுபத்து ஒர் இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் பைசா எழுபத்து மூன்று மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப் பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையும் சொத்தின் விளக்கம்

வ.எண்.	அசையும் சொத்துக்கள்
1	பிணையில் உள்ள சரக்கிருப்புகள் மற்றும் புத்தகக் கடன்கள்

அசையாச் சொத்தின் விளக்கம்

1. திரு. அஜித்பிரசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து

1	வரிசை எண்	1 (ஒன்று)
2	மாவட்டம்	திருவனந்தபுரம்
3	துணை மாவட்டம்	பலராமபுரம்
4	வட்டம்	நெய்யாட்டிங்கரா
5	கிராமம்	பள்ளிச்சல்
6	முரி	பள்ளிச்சல்
7	ஊராட்சி	பள்ளிச்சல்
8	மறு-சர்வே பிளாக் எண்	4 (நான்கு)
9	மறு-சர்வே எண்	237 (இருநூற்று முப்பத்து ஏழு)
10	மறு-சர்வே துணைப்பிரிவு	19-2-1, 19-3-1
11	பழைய சர்வே எண்	160
12	பழைய சர்வே துணைப்பிரிவு	1
13	காலஅளவு / வகை	பூர்வீகம், வறண்ட
14	விற்பனைப் பரப்பளவு	01.41 ஏர்கள், 0.61 ஏர்கள்
15	தண்டபேர்	18560
16	விளக்கம்	

பலராமபுரம் சார்பதிவிற்குட்பட்ட விற்பனை ஆவண எண்.326/2014 இன்படி பள்ளிச்சல் கிராமம் (பிளாக் எண்.4), தண்டப்பேர் எண்.18560, பழைய சர்வே எண்.160/1, மறு-சர்வே எண்.237/19-2-1 (ஆவணத்தின்படி மறு-சர்வே 237/19-2) இல் அடங்கிய 01.41 ஏர்கள் மற்றும் பழைய சர்வே எண்.161/1, மறு- சர்வே எண்.237/19-3-1 (ஆவண எண்ணின் படி மறு-சர்வே எண்.237/19-3) இல் அடங்கிய 0.61 ஏர்கள், திரு. அஜித்பிரசாத் அவர்களின் உரிமைப்பெற்ற மொத்தப் பரப்பளவு 02.02ஏர்கள் விஸ்தீரணங்கொண்ட சொத்து அதனுடன் அதில் உள்ள அனைத்து இதர உபபொருட்கள்.

17	எல்லைகள்:	
கிழக்கில்	திரு. இராஜேந்திரபிரசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து	
வடக்கில்	திரு. இராஜேந்திரபிரசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து	
மேற்கில்	திரு. மணியம் நாடார் அவர்களுக்குச் சொந்தமான சொத்து	
தெற்கில்	ஸ்வாதி நகர் சாலை	

2. திரு. இராஜேந்திரபிரசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து

1	வரிசை எண்	1 (ஒன்று)
2	மாவட்டம்	திருவனந்தபுரம்
3	துணை மாவட்டம்	பலராமபுரம்
4	வட்டம்	நெய்யாட்டிங்கரா
5	கிராமம்	பள்ளிச்சல்
6	முரி	பள்ளிச்சல்
7	ஊராட்சி	பள்ளிச்சல்
8	மறு-சர்வே பிளாக் எண்	4 (நான்கு)
9	மறு-சர்வே எண்	237 (இருநூற்று முப்பத்து ஏழு)
10	மறு-சர்வே துணைப்பிரிவு	19-2, 19-3-2
11	பழைய சர்வே எண்	160
12	பழைய சர்வே துணைப்பிரிவு	1
13	காலஅளவு / வகை	பூர்வீகம், வறண்ட
14	விற்பனைப் பரப்பளவு	0.21 Ares, 0.16 Ares
15	தண்டபேர்	18559
16	விளக்கம்	

பலராமபுரம் சார்பதிவிற்குட்பட்ட விற்பனை ஆவண எண்.327/2014 இன்படி பள்ளிச்சல் கிராமம் (பிளாக் எண்.4), தண்டப்பேர் எண்.18559 பழைய சர்வே எண்.160/1, மறு-சர்வே எண்.237/19-2 இல் அடங்கிய 0.21ஏர்கள் மற்றும் பழைய சர்வே எண்.161/1, மறு-சர்வே எண்.237/19-3-2 (ஆவணத்தின்படி மறு - சர்வே எண்.237/19-3) இல் அடங்கிய 0.16 ஏர்கள், திரு. இராஜேந்திரபிரசாத் அவர்களின் உரிமைப்பெற்ற மொத்தப் பரப்பளவு 0.37ஏர்கள் (ஆவணத்தின்படி 0.40 ஏர்கள்) விஸ்தீரணங்கொண்ட சொத்து அதனுடன் அதில் உள்ள அனைத்து இதர உபபொருட்கள்.

17	எல்லைகள்:	
கிழக்கில்	நடைவழி	
வடக்கில்	திரு. இராஜேந்திரபிரசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து	
மேற்கில்	திரு. அஜித்பிராசாத் அவர்களுக்குச் சொந்தமான சொத்து	
தெற்கில்	ஸ்வாதி நகர் சாலை	

இடம் : சென்னை
நாள் : 16.10.2025
அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

Central Bank of India / சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
மயிலாப்பூர் கிளை
211/95, T V லோகநாதன் டவர், VM தெரு, மயிலாப்பூர், சென்னை-600 040 Ph: 044-23464291

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-வில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: 1.Mr.நந்தகோபால் G, 2.Mrs.லட்சுமி G, இருவரது முகவரி, எண்.7/116, பொம்மநாயக்கன் பாளையம், நெரிப்பெரிச்சல், திருப்பூர், தமிழ்நாடு - 641602

கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.11.2024 / கடன் நிலுவைத்தொகை: 15.10.2025 அன்றுள்ளபடி ₹2,86,08,126/- மற்றும் வட்டி, கட்டணங்கள்; சுவாதீனம் அறிவிப்பு தேதி: 15.02.2025

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

மத்திய சென்னை பதிவு மாவட்டம், புரசைவாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.509, CC எண்.209, RS எண்.2932/5, பிரிவின் படி R.S.எண்.2932/152, புரசைவாக்கம் கிராமம், பெரம்பூர் புரசைவாக்கம் தாலுகா, தற்போது புரசைவாக்கம் தாலுகா, சென்னை மாவட்டம், புதிய கதவு எண்.182, பழைய எண்.115/2, வரதம்மாள் கார்டன், 2வது தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600010 என்னும் முகவரியில் 2104 சதுர அடி நிலம் (72 அடி * 7 அடி = 504 சதுர அடி தனிப்பட்ட வழிப்பாதை உட்பட), அதிலுள்ள 3200 சதுர அடி தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: RS எண்.2932/5, தெற்கு: Mrs.பட்டம்மாள் & மற்றவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கு: R.S.எண்.2949, மேற்கு: வரதம்மாள் கார்டன் இரண்டாவது தெரு. அளவுகள்: வடக்கு: 40 அடி, தெற்கு: 40 அடி, கிழக்கு: 40 அடி, மேற்கு: 40 அடி ஆகமொத்த 2104 சதுர அடி தனிப்பட்ட 504 சதுர அடி வழிப்பாதை உட்பட.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 2,90,00,000/-	டேவணித்தொகை	₹ 29,00,000/-
ஏல உயர்வு தொகை	₹ 50,000/-	சுவாதீனம் வகை: நேரடி (Physical)	

இ-ஏல தேதி மற்றும் நேரம்: 26.11.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 26.11.2025 மாலை 3.30 மணிக்குள்

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 24.11.2025 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com (அல்லது) வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, மயிலாப்பூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mr.Yegoreddi Venugopalarao, முதன்மை மேலாளர் Mob: 99620 52877 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை; தேதி: 15.10.2025 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

FEDERAL BANK
YOUR PERFECT BANKING PARTNER

பதிவு அலுவலகம்: ஆல்வாய், கேரளா
LCRD/சென்னை டிவிசன்: எண்.27, 3வது தளம், அக்ஷயா சாந்தி, தலைமை அஞ்சல் அலுவலகம் எதிரில், அண்ணாசாலை, சென்னை-600002. Ph: 044-4774 8486/87
Email: chnlcrd@federalbank.co.in Website: www.federalbank.co.in, CIN: L65191KL1931PLC000368

இ-ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சேர்த்துவாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

பெடரல் பேங்க் லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை பெடரல் பேங்க் லிமிடெட் (கடன் கொடுத்த வங்கி)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் (Physical Possession) எடுக்கப்பட்டு கடன் பெற்றவர்களான 1) Smt.R.தேவி W/o.N.ரமேஷ் குமார், 2)Sri.N.ரமேஷ் குமார், S/o.நல்லசாமி கவுண்டர், இருவரது வசிக்கும் முகவரி: 158, வீரபத்திர தெரு, கருணாகபாளையம், ஈரோடு, தமிழ்நாடு- 638003, 3)M/s.ஹோட்டல் J மாரியட், கூட்டாளி நிறுவனம், அதன் பதிவு அலுவலகம், எண்.67, வாசுகி, 1வது தெரு, ஈரோடு- 638001, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு-638001, அதன் சார்பாக கூட்டாளிகள், a)Sri.N.ரமேஷ் குமார், S/o.நல்லசாமி கவுண்டர் மற்றும் b)Smt.R.தேவி W/o.N.ரமேஷ் குமார் ஆகியோரிடமிருந்து வரவேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள விற்பனை தேதிப்படி ₹7,01,55,982.33 மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் விதி 8 & 9-ன் கீழ் "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 06.11.2025 அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

சொத்தின் குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 4,33,00,000/-
மற்றும் டேவணித்தொகை: ₹ 43,30,000/-

அசையா சொத்து விபரம்
(தெரிந்த வில்லங்கங்கள் ஏதுவும் இருப்பின், அவற்றுடன்)

தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 164/28B, பழைய சர்வே எண்கள். 164/1 அடுத்து 164/B1 பகுதி, பட்டா எண்.3355, வில்லா 2, Dr.தாமஸ் அவின்யூ, ஈஞ்சம்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 5600 சதுர அடி மேல் கட்டுமான பரப்பு கொண்ட வில்லா (பொது இடம் மற்றும் பொது பங்கு உட்பட). மொத்தமுள்ள 7085.25 சதுர அடியில் 3542.25 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Dr.தாமஸ் அவின்யூ மற்றும் மீனா B.இந்துஜா, கோமல் B.இந்துஜா, அம்ரிதா B.இந்துஜா-க்கு சொந்தமான நிலம், தெற்கு: Mrs.K.செல்லம்மாள், P.N.அருணாச்சலம், K.P.கைலாசம்-க்கு விற்ற நிலம், கிழக்கு: மீனா B.இந்துஜா, கோமல் B.இந்துஜா, அம்ரிதா B.இந்துஜா-க்கு சொந்தமான நிலம், மேற்கு: தனியார் நிலம்.

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கம் ஏதும் இல்லை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பெடரல் பேங்க் லிமிடெட்-ன் இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும் அதாவது; https://federalbank.co.in/web/guest/tender-notices & https://www.auctionbazaar.com

இடம்: சென்னை
தேதி: 16.10.2025
தி :.பெடரல் பேங்க் லிமிடெட் (SARFAESI Act.கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)

அடையாள சுவாதீன அறிவிப்பு

ICICI Bank — கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிட்டெட், 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு-560068

ICICI வங்கி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைக் கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழ் தனக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தைக் கீழே குறிப்பிட்டுள்ள நாளில் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரருக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது ICICI வங்கி லிமிடெடுக்குக் கட்டணம் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	சொத்தின் விவரம் / அடையாள சுவாதீன நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள் / கோரிக்கை அறிவிப்புத் தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	கலைவாணி S & சிலம்பரசன் / மனை எண் 123, மனை எண் 123, மேற்குப் பக்கம் ட்ரீம் பார்க், வீட்டு எண் D, சேகரன் S ரோலண்ட்ஸ் அவென்யூ 4ஆவது தெரு, சித்தலபாக்கம் 232/29, சென்னை – 600126 / LBCBT00005568339 & LBCHE00005572476	பின்னிணைப்பு "A" (கடனீட்டுச் சொத்து விவரங்கள்) (சொத்தின் விவரம்) - இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். நிலத்தின் பரப்பளவு 1200 சதுர அடி, சர்வே எண் 417, பூந்தமல்லி கிராமம், மனை எண் 91, வசந்தபுரி கட்டம்-II, பூந்தமல்லி, சென்னை, பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 92, தெற்கு: 20 அடி அகலமுள்ள சாலை, கிழக்கு: 20 அடி அகலமுள்ள சாலை, மேற்கு: மனை எண் 90. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 40 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 40 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 30 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 30 அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கும் பூந்தமல்லி சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. / அடையாள சுவாதீன நாள்: 16.10.2025.	18.06.2025 ரூ. 42,20,536/-	சென்னை & காஞ்சிபுரம்
2.	ஜெயன் P & எழிலரசி / ஃபிளாட் எண் 301, பிளாக் எண் 3 பிரிவு D, 3ஆவது தளம், டாக்டர் அப்துல் கலாம் சாலை, புதுப்பாக்கம், காஞ்சிபுரம் - 603103 / LBCHE00002243432 & LBCHE00002246048	LBCHE00002243432 _ஜெயன் P : அட்டவணை – A (சொத்தின் விவரம்) – "பிராவிடென்ட் காஸ்மோ சிட்டி", D பிளாக், மூன்றாவது தளம், ஃபிளாட் எண் D-8 301-இல் அமைந்துள்ள சொத்து. சர்வே எண்கள் 53/3, 53/4, 55, 56/1, 57/2, 57/4, 53/10B. அமைவிடம் - பழைய கிராம எண் 41, புதிய கிராம எண் 19, புதுப்பாக்கம் கிராமம், முன்பு சித்தலப்பாக்கம் தாலுகா, தற்போது திருப்போரூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். கட்டுமானப் பரப்பு 1064 சதுர அடி மற்றும் பிரிபடாப்பங்கு 0.0480% (அதாவது 575.69 சதுர அடி) உட்பட 27.81 ஏக்கரில் அடங்கியது மற்றும் ஒரு திறந்தவெளி கார் நிறுத்துமிடம் உட்பட. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சாலை (முன்பு சர்வே எண் 53/3 பாகம் மற்றும் சர்வே எண் 55 பாகம் ஆகியவற்றில் உள்ள நிலம் சாலை விரிவாக்கத்திற்காக தற்போது அன்பளிப்பு செய்யப்பட்டது), தெற்கு: சர்வே எண் 53/10A, 53/6, 52 & 44 –இன் பாகத்தில் உள்ள நிலம், கிழக்கு: சாலை (முன்பு சர்வே எண் 55 பாகம், 56/1 பாகம், 57/4 பாகம், 57/2 பாகம், 57/3 மற்றும் சர்வே எண் 44 ஆகியவற்றில் உள்ள நிலம் சாலை விரிவாக்கத்திற்காக தற்போது அன்பளிப்பு செய்யப்பட்டது), மேற்கு: டாக்டர் அப்துல் கலாம் சாலை மற்றும் சர்வே எண் 53/10A, 53/6, 53/8, 53/9, 52 & 44 பாகம் ஆகியவற்றில் உள்ள நிலங்களின் பாகம். இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. / அடையாள சுவாதீன நாள்: 16.10.2025.	10.06.2025 ரூ. 26,17,267.82/-	சென்னை & காஞ்சிபுரம்
3.	நாகலக்ஷ்மி P & கோபால் N/ ஃபிளாட் எண் D31, எண் 103, 1ஆவது தளம், பிளாக் D, பிராவிடென்ட் காஸ்மோ தெரு, அப்துல் கலாம் தெரு, புதுப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை 53/3 53/4 55 56/1 57/2 57/4 53/10, சென்னை – 603103 / LBCHE00004813812.	சொத்து அட்டவணை : 27.81. ஏக்கரில் அடங்கிய 0.0440% (532.87 சதுர அடி) பிரிபடாப்பங்கு நிலம், சர்வே எண்கள் 55, 56/1, 57/2 & 57/4, பரப்பளவு 23.50 ஏக்கர், Dtcp ஒப்புதல் Ref. எண் 16098/2008 CB, 26.02.2009 நாளிட்டது, சர்வே எண் 53/3, பரப்பளவு 1.04 ஏக்கர், சர்வே எண் 53/4, பரப்பளவு 3.18 ஏக்கர் மற்றும் சர்வே எண் 53/10B, பரப்பளவு 0.09 ஏக்கர், பட்டா எண்கள் 2255, 2259, பிராவிடென்ட் காஸ்மோ சிட்டி, எண் 41, அப்துல் கலாம் தெரு, புதுப்பாக்கம், சென்னை – 603103. அமைவிடம் - புதுப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். இது காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்துக்கும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இத்துடன் "பிராவிடென்ட் காஸ்மோ சிட்டி" என அறியப்பட்ட முதல்தளம், பிளாக் D31, அலகு எண் D103 கொண்ட ஃபிளாட், கட்டுமானப் பரப்பு 983 சதுர அடி (பொதுப் பகுதிகள் மற்றும் பொது பங்குகள் சேர்த்து) மற்றும் தரைத்தளத்தில் உள்ள ஒரு பதிவு செய்யப்பட்ட கார் நிறுத்துமிடம் மற்றும் வழங்கப்பட்டுள்ள அனைத்து பொதுவான அடிப்படை வசதிகள் அதாவது நீர், மின்சார சேவை இணைப்பு, சுகாதாரம் முதலானவற்றுடன் அதில் வழங்கப்பட்ட அனைத்து பொதுவான வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து பிற சாதனங்கள் உட்பட. முழு நிலப்பரப்பின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சாலை (முன்பு சர்வே எண் 53/3 பாகம் மற்றும் சர்வே எண் 55 பாகம் ஆகியவற்றில் உள்ள நிலம் சாலை விரிவாக்கத்திற்காக தற்போது M/s புறவங்கரா புராஜக்ட் லிட். நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது), தெற்கு: சர்வே எண் 53/10A, 53/6, 52 & 44 –இன் பாகத்தில் உள்ள நிலம், கிழக்கு: சாலை (முன்பு சர்வே எண் 55 பாகம், 56/1 பாகம், 57/4 பாகம், 57/2 பாகம், 57/3 மற்றும் சர்வே எண் 44 ஆகியவற்றில் உள்ள நிலம் சாலை விரிவாக்கத்திற்காக தற்போது M/s புறவங்கரா புராஜக்ட் லிட். நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது), மேற்கு: டாக்டர் அப்துல் கலாம் சாலை மற்றும் சர்வே எண் 53/10A, 53/6, 53/8, 53/9, 52 & 44 பாகம் ஆகியவற்றில் உள்ள நிலங்களின் பாகம். / அடையாள சுவாதீன நாள்: 16.10.2025.	11.06.2025 ரூ. 23,34,779.00/-	சென்னை
4.	ஷியாம்சுந்தர் & கணேஷ் சீதாமகாலக்ஷ்மி / தளம் 2 மனை எண் 201, பிளாக் ஜாஸ்பர் கோட்ரெஜ் அஜுர் கட்டம் 2, கழிப்பத்தூர் கிராமம், திருப்போரூர், சென்னை – 603105 / LBCHE00005843017	சொத்து அட்டவணை (மேற்படி சொத்து விவரம்): இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய 6.2231 ஏக்கர் பரப்பளவு கொண்ட மறுவகைப்படுத்தப்பட்ட நிலங்கள். அமைவிடம் - படூர் மற்றும் கழிப்பத்தூர் கிராமங்கள், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு. சர்வே எண்கள் 281/4, 282, 283/1B, 284/1 (பாகம்), 284/2A (பாகம்), 284/2B (பாகம்), 281/1B2, 283/2, படூர் கிராமம் மற்றும் 224/1, 222/2, 227/1A, 227/1B, 227/1C, 227/2A, 227/2B, 227/2C, 227/3, 225/1, 225/2, 226/2, 226/1, 224/2, ஆக மொத்தம் 3366.85 சதுர மீட்டர் நிலத்தைக் கழித்து, நிலத்தை பாதுகாக்கப்பட்ட திறந்தவெளி (OSR), இது படூர் மற்றும் கழிப்பத்தூர் ஊராட்சிக்கு அன்பளிப்பாக 10.08.2015 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள் 10096/2015 & 10095/2015, ஆவணம் SRO, திருப்போரூர் இதில் வழங்கப்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே 281/1B1B, 229, 226/4, 222/1A ஆகியவற்றில் உள்ள நிலங்கள், தெற்கு: ஊராட்சி சாலை (படூர் 2ஆவது பிரதான சாலை), கிழக்கு: 222/1B, ஊராட்சி சாலை (திரு.வி.க. தெரு), மேற்கு: சர்வே எண் 283/2, 281/1B1A, 283/1 ஆகியவற்றில் உள்ள நிலங்கள். அட்டவணை – B: (நிலம் / மனையின் பிரிபடாப்பங்கு விவரம் இதன்மூலம் ஒதுக்கப்பட்டவருக்கு தெரிவிக்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டது) 28.52 சதுர அதாவது 307 சதுர அடிப் பிரிபடாப்பங்கு, உரிமை, பங்கு மற்றும் பாத்தியதை மேற்படி உள்ள அட்டவணை "A"-இல் சொத்தில் உள்ள நிலத்தில் அடங்கியது. அட்டவணை – "C" (அபார்ட்மெண்ட் விவரம்) "கோட்ரெஜ் அஜுர் கட்டம் II" என அறியப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஜாஸ்பர் என பெயரிடப்பட்ட பிரிவு / டவர் -இன் 2ஆவது தளத்தில் உள்ள சிறிய வகை 3 Bhk, அபார்ட்மெண்ட் எண் 201, மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 77.76 சதுர மீட்டர் அதாவது 837 சதுர அடி, இதில் ஏறக்குறைய 4.18 சதுர மீட்டர் அதாவது 45 சதுர அடி பரப்பளவு தவிர்த்து, பயன்பாட்டுப் பரப்பு ஏறக்குறைய 73.58 சதுர மீட்டர் அதாவது 792 சதுர அடி. இத்துடன் 1ஆம் எண்ணில் உள்ள மூடப்பட்ட கார் நிறுத்துமிடத்தின் தொடர்புடைய வழிப்பாதை உரிமைகள் உட்பட. / அடையாள சுவாதீன நாள்: 16.10.2025.	12.05.2025 ரூ. 50,72,484.14/-	சென்னை
5.	P தங்கராஜ் & T ஜெயபாரதி / மனை எண் 91, எண் 45 வசந்தபுரி கட்டம் II, வசந்தபுரி, சென்னை, 417, சென்னை – 600056 / LBCHE00005041120 & LBCHE00005041175	(சொத்தின் விவரம்): இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். நிலத்தின் பரப்பளவு 1200 சதுர அடி, சர்வே எண் 417, பூந்தமல்லி கிராமம், மனை எண் 91, வசந்தபுரி கட்டம்-II, பூந்தமல்லி, சென்னை, பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 92, தெற்கு: 20 அடி அகலமுள்ள சாலை, கிழக்கு: 20 அடி அகலமுள்ள சாலை, மேற்கு: மனை எண் 90. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 40 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 40 அடி, வடக்குத் தெற்காக கிழக்குப் பக்கம் - 30 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 30 அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கும் பூந்தமல்லி சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. / அடையாள சுவாதீன நாள்: 16.10.2025.	18.06.2025 ரூ. 42,20,536.00/-	சென்னை & திருவள்ளூர்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு மேற்கூறிய தொகையினைச் செலுத்த இதன் மூலம் 30 நாட்கள் அவகாச அறிவிப்பு தரப்படுகிறது. தவறினால், இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8 மற்றும் 9 ஆகியவற்றின் கீழுள்ள உரிமைகளின்படி அடமானச் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும்.

நாள்: 18.10.2025
இடம்: சென்னை & காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்
உண்மையுள்ள அதிகாரப்பூர்வ அலுவலர், ICICI வங்கி லிட். சார்பில்